**<u>மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.</u>**

**<u>அசல் வழக்கு எண்.89/2016</u>**

முன்னிலை – பா.சரவணன், பி.எஸ்ஸி., பி.எல்.,
மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி.

2026 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 31 ஆம் நாள் வெள்ளிக்கிழமை வாதி தரப்பில் இரண்டாவது சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.V.மகேஸ்வரி, இருக்கை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | பிரவீன் (எ) பிரவீன் குமார் | தந்தை பெயர் | : பழனிவேல் |
| ஜாதி | : | | கிராமம் | : |
| வட்டம் | : | | மதம் | : |
| தொழில் | : | | வயது | : |

நாள் : 31.07.2026

**P.W. : 2**

**<u>1–ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

வா.சா.ஆ.1 ஆவணம் என் அப்பாவிடம் எப்போது வந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இந்த வா.சா.ஆ.1 ஆவணம் எப்பொழுது என் தந்தையின் ஒப்படைக்கப்பட்டது என்ற விவரத்தை வா.சா.2, 3,4 ஆவணங்களிலும் மற்றும் வழக்குரையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என் அப்பாவிடம்

கொடுத்துள்ளார்கள். அது எப்போது கொடுக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தான் நான் முதல் முறையாக பார்க்கிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 இன் நகலை நான் பார்த்ததில்லை, நான் படித்து பார்த்ததும் இல்லை. என் அப்பா தான் இந்த வழக்கை முழுவதும் கவனித்து வந்தார். அதனால் இந்த வா.சா.ஆ.1 ஆவணம் பற்றிய விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. தெரியும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தின் 3 வது பக்கத்தில், சொத்தின் மதிப்பு எவ்வளவு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், ரூ.26,42,918/– என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தின் தேதி 08.02.2013 என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்திற்கு சுமார் 60 நாட்களுக்கு முன்பு தான் வா.சா.ஆ.1 ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தின் 3 வது பக்கத்திலேயே எழுதி கொடுத்தவரால், நம் தந்தை திரு.ராஜு மற்றும் நம் தாயார் பரிமளா ஆகியோர் ஷை வீட்டில் அவர்களின் ஆயுள் வரை குடியிருந்து வர மட்டும் உரிமையுண்டு என்ற வாசகம் உள்ளது என்றால் சரிதான். மேற்கண்டவாறு நிபந்தனை உள்ளது என்ற விவரத்தை வா.சா.ஆ.3 வழக்கறிவிப்பிலோ, எனது முதல் விசாரணை வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 ஆவணத்திலும், எனது முதல் விசாரணையிலும் மேற்கண்ட ஆயுள் வரை குடியிருக்கும் உரிமை பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். எனது தந்தையார் தாவா சொத்தை கிரையம் வாங்கும் எண்ணத்தில் வா.சா.ஆ.2 ஆவணத்தை ஏற்படுத்தி இருந்தால் மேற்சொன்ன குடியிருக்கும் உரிமை பற்றிய நிபந்தனை பற்றி வா.சா.ஆ.2,

3, மற்றும் வழக்குரை ஆகியவற்றில் சொல்லியிருப்பார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 உடன்படிக்கையின் அசலை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 இன் அசல் தாக்கல் செய்யப்படாததற்கு என்ன காரணம் என்ற விவரத்தை எனது முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி அசல் எங்குள்ளது என்றும், அதை தாக்கல் செய்யமுடியுமா என்றால் பார்த்துவிட்டு வந்து தான் சொல்ல முடியும். எதை பார்த்துவிட்டு வந்து அதை சொல்ல முடியும் என்றால், என் அப்பாவின் ஆவணங்களை வீட்டில் பார்த்துவிட்டு தான் சொல்லமுடியும். வா.சா.ஆ.2 இன் அசல் ஆவணம் இன்று வரை என்னிடமோ, என் தந்தையிடமோ கைவசம் இல்லை என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்ட போது நான் என் அப்பாவுடன் வந்தேன். அந்த ஆவணம் பதிவு செய்த போது தான் வந்தேனா என்றால், நிறைய முறை வந்துள்ளேன். நிறைய முறை திருச்சிக்கு தான் வந்துள்ளேன். திருச்சிக்கு வழக்கறிஞரை பார்க்கவோ, அல்லது நீதிமன்றத்திற்கு வந்தேனா என்றால் இல்லை. என் அப்பா இந்த சொத்தை வாங்க வந்தபோது வந்தேன். என் அப்பா இறந்தவுடன் என்னை வாரிசாக சேர்க்க உடனடியாக மனு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் என்னை வாரிசாக சேர்க்க சொல்லி நீண்ட காலத்திற்கு பிறகு தான் மனு செய்தேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 இன் அசல் இருக்கிறதா என்று பார்த்துவிட்டு சொல்லமுடியும் என்று கூறுவது தவறு என்றால் சரியல்ல. அசல் கைவசம் இல்லை என்றால் சரியல்ல. அசல் கைவசம் இருந்திருந்தால் சான்றிட்ட நகல் பெற்று வழக்கு தாக்கல் செய்யவேண்டிய அவசியம் இல்லை

என்றால் சரியல்ல. ரூ.26,50,000/– மதிப்புள்ள சொத்தை ரூ.16,00,000/–க்கு விற்க வேண்டிய கட்டாயம் மற்றும் அவசியம் 1ம் பிரதிவாதிக்கு எப்போதும் இல்லை என்றால் சரியல்ல. எனது வழக்குரையில் சொல்லியுள்ள 2 வருட காலக்கெடுவிற்கான காரணங்கள் வா.சா.ஆ.2 இல் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு 2 வருட காலக்கெடுவிற்கான காரணம் வா.சா.ஆ.2 ஆவணத்தில் இல்லை என்று தெரிந்தும் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தை யார் தயார் செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. உண்மையில் நான் என் தந்தையுடன் வா.சா.ஆ.2 ஏற்பட்ட போது வந்திருந்தால், அதை தயாரித்தவர் மற்றும் சாட்சிகள் பற்றிய விவரம் தெரிந்திருக்கும் என்றும், நான் தெரியாமல் நானும் வந்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 1–ஆம் பிரதிவாதி மனு செய்து நீதிமன்றம் உத்தரவிட்ட பிறகு, நான் தாக்கல் செய்த ஆவணங்களுடன் என் தந்தையின் வருமான வரி கணக்கு விவரங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த ஆண்டிற்கான வருமான வரி கணக்கை எடுக்கமுடியவில்லை. உண்மையில் என் அப்பா அந்த சொத்தை வாங்க வேண்டி ஒப்பந்தம் ஏற்படுத்தியிருந்தால், அதை தனது வருமான வரி கணக்கில் கூறியிருப்பார் என்றும், அவ்வாறு கூறவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அதனால் தான் என் அப்பாவின் வருமான வரி கணக்கை தாக்கல் செய்யாமல் மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் தற்போது தாக்கல் செய்த வங்கி கணக்கு விவரப் பட்டியலில் 2013 ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் முடிய அதிகப்படியான இருப்பு தொகை இல்லை என்றால் சரியல்ல. சாட்சி தாமாக கூறுகிறார் – 2012 டிசம்பர்

முதல் டிசம்பர் 2014 வரை அவர் வங்கி கணக்கில் ரூ.9,22,000/– வரை வரவு செலவு செய்துள்ளார். அது தவிர அவர் பணி ஓய்வு பெற்ற போது ரூ.19,84,000/– பண பலன் கிடைத்தது. அவ்வாறு பணி ஓய்வின் போது 2010–2011 ஆம் ஆண்டு கிடைத்த பணி ஓய்வு பலன்களை உடனடியாக அச்சமயத்திலேயே என் அப்பா எடுத்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. என் அப்பா பணி ஓய்வு பலன்களை அப்போதே உடனுக்குடன் எடுத்துவிட்டார் என்றும், அதை வைத்து கிரைய முன் தொகை எதுவும் தரவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக நான் பணி ஓய்வு பலன்களை வைத்து கிரைய முன் தொகை கொடுத்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. என் அப்பாவிற்கு வா.சா.ஆ.2 இல் கண்ட கிரைய முன் தொகை ரூ.15,00,000/– கொடுக்கும் அளவிற்கு தகுதி இல்லை என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணை பத்தி–7 இல் சொல்லியுள்ள சங்கதிகளை 1ம் பிரதிவாதி எப்போது சொன்னார் என்ற விவரம், அதில் இல்லை என்றால் தேதி விவரம் இல்லை. நான் முதல் விசாரணை பத்தி–8 இல் பல முறை பிரதிவாதியை சந்தித்து கேட்டதாக கூறியுள்ளேன் . அது எந்தெந்த தேதி என்று கூறவில்லை. நான் பிரதிவாதியை நேரில் சந்தித்து கேட்கவில்லை என்றும், அதனால் தான் தேதியை சரியாக சொல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 17.03.2014 தேதியில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய சமயத்தில் 1ம் பிரதிவாதி, தாவாச் சொத்தில் உள்ள வீட்டை இடித்து ஆல்டர் செய்கிறார் என்ற விவரம் தெரிந்து தான் அறிவிப்பு அனுப்பினோம் என்றால் சரிதான். எங்களுக்கு சொத்தை விற்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஒப்பந்தம் ஏற்படுத்தாததால் தான் 1ம் பிரதிவாதி வீட்டை இடித்து ஆல்டர் செய்தார்

என்றால் சரியல்ல. உண்மையில் கிரைய செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் ஒப்பந்தம் செய்திருந்தால், அந்த சமயத்திலேயே ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரியிருப்பேன் என்றும், அவ்வாறு இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் அப்பா தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.657/2014 தாக்கல் செய்த போது, வெறும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் மட்டும் தான் போடப்பட்டுள்ளது என்றால் தெரியாது. வா.சா.ஆ.4 ஆவணத்தில் கண்ட வழக்கில் சொத்தை விற்பது சம்பந்தமாக எந்த வித விவரமும் சொல்லவில்லை, பரிகாரமும் கேட்கவில்லை என்றும், எனவே வாசா.ஆ.2 ஆவணம் கிரைய உடன்படிக்கைக்காக ஏற்படவில்லை என்றும், அதனால் தான் அந்த வழக்கில் பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தொடர்ந்து இடித்து ஆல்டர் செய்துவிட்டார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியிடம் கடனை வசூல் செய்யவும், அவரை அச்சுறுத்தவும், வா.சா.ஆ.4 வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி எப்போது அதிக தொகை கேட்டார் என்ற விவரத்தை பத்தி–12 இல் கூறவில்லை என்றால் தேதி, தொகை சொல்லவில்லை. உண்மையில் 1ம் பிரதிவாதி அவ்வாறு கேட்டிருந்தால், அந்த தொகையை சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 அறிவிப்பில் ஒரு வார காலத்தில் சொத்தை கிரையம் எழுதி தருவது சம்பந்தமாக பதிலை தரவேண்டும் என கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த அறிவிப்பிற்கு 1ம் பிரதிவாதி பதில் தரவில்லை என்றால் சரிதான். அதன் பிறகு பத்திரம் எழுதும் தேதி குறிப்பிட்டும் பாக்கி ரூ.1 இலட்சம் தர தயாராக இருப்பதாகவும், தேதி குறிப்பிட்டு பத்திரம் எழுத வரும் படி 1ம் பிரதிவாதிக்கு மீண்டும் ஒரு அறிவிப்பு அனுப்பவில்லை என்றால்

வா.சா.ஆ.3 க்கு பிறகு மேல் அறிவிப்பு அனுப்பவில்லை. வா.சா.ஆ.3 அறிவிப்பிற்கு பிறகு வா.சா.ஆ.4 வழக்கு தாக்கல் செய்தோம். 1ம் பிரதிவாதி வா.சா.ஆ.3 க்கே பதில் அனுப்பவில்லை. வா.சா.ஆ.3 க்கு பிறகு 1ம் பிரதிவாதி கிரைய பத்திரம் எழுதி தர விரும்பவில்லை என்று தெரிந்த பிறகும், இதன் கால் ஏற்றதை ஆற்றுக பரிகாரம் எடுக்க வேண்டி நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. வாசா.ஆ.2 ஆவணம் 1ம் பிரதிவாதியால் இராஜேந்திரனிடம் பெற்ற கடனுக்கு பொறுப்புக்காக ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தை அடிப்படையாக கொண்டு நாங்கள் எந்த பரிகாரமும் கோரமுடியாது என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி.
திருச்சிராப்பள்ளி.